பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 10 | வெள்ளிக்கிழமை | 27.10.2023 | அதிர்வு 87

## பொலிஸ் நிலையத்தில் தவறுதலாக பிஸ்டல் சூடு

(ரஸீன் ரஸ்மின்)

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் நேற்று கைத்துப்பாக்கி ஒன்று தவறுதலாக இயங்கியதில் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபில் ஒருவர் காயமடைந்துள்ளார். 06▶

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிக்கும் முடிவை மொட்டுக் கட்சி எடுக்கவேயில்லை!

## அக்கட்சியின் எம்.பியான சந்திரசேன விளக்கம்



2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க பொது ஜன பெரமுன கட்சியின் மட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை. தனிப்பட்ட தரப்பினரது நிலைப்பாட்டை கட்சியின் நிலைப்பாடாகக் கருத முடியாது. பொதுஜன பெரமுன வழங்கியுள்ள ஒத்துழைப்பை ஜனாதிபதி பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என ஆளுந்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை 09▶

# கொழும்பில் சீனாவின் ஆய்வுக் கப்பல்; மிகத் தீவிரக் கண்காணிப்பில் இந்தியா

## பாரத கடற்படை முழு உஷார் நிலை விமானங்கள், ட்ரோன்கள் களத்தில்

(திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)

**இந்திய, அமெரிக்கா எதிர்ப்பையும் மீறி கொழும்புத் துறைமுகத்துக்கு சீன ஆய்வுக் கப்பல் 'ஷியான் -6' புதன்கிழமை வந்திருக்கும் நிலையில், இந்தியக் கடற்படை தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது. கண்காணிப்பு விமானங்கள் மற்றும் ட்ரோன்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.** 09▶



## அன்று பூனைக்குட்டிகள் போல் இருந்துவிட்டு இன்று நாய்களைப் போல் குரைக்காதீர்கள்!

### நாமலையும் சாகரவையும் கடுமையாகச் சாடிய லான்சா



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசமும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் பூனைக் குட்டிகளைப் போல் ஊமையாகப் பதுங்கி இருந்தார்கள். ஆனால், அவர்கள் இருவரும் தற்போது பெரிய நாய்களைப் 06▶

## கொழும்பில் கோர விபத்தில் 7 வயது தமிழ்ச் சிறுவன் பலி

### தந்தை படுகாயம்

வாகன விபத்தில் 7 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவரின் தந்தை படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு – மகரகம பிரதேசத்தில் 06▶



## ரணிலுக்கு பட்ஜெட்டில் மொட்டு செக் வைக்கும்?

அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்ல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதா? இல்லையா? – என்பதைத் தீர்மானிப்பது குறித்து பொதுஜன பெரமுன ஆலோசனை நடத்தியுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட முன்மொழிவின் பின்னர், இது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பது குறித்தும் அக்கட்சி கலந்துரையாடியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றில் இந்த விடயம் 06▶




இலங்கையின் மூன்று தசாப்த கால யுத்தத்தோடு சேர்ந்து பயணித்த – அந்தச் சமயத்திலும் பத்திரிகையாளராக களத்தில் பணியாற்றி நின்று பிடித்த – அனுபவசாலிகள்ரொம்பக் குறைவு. யுத்தத்தோடும், அதனோடு நேரடியாகத் தொடர்புபட்ட தரப்புகளோடும், செய்திகளோடும் இயைந்தபடி ஊடகப் பணியில் தொடர்வது என்பது பேரச்சமும் ஆபத்தும் தரும் அனுபவம். ஆயுதங்கள் தாங் 06▶

# புளியங்குளம் வடக்கு முத்துமாரிநகர் மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்







வவுனியா, ஒக். 27

வவுனியா புளியங்குளம் வடக்கு முத்து மாரிநகர் மக்கள் இணைந்து ஐந்து அம்சக் கோரிக்கையை முன்னிறுத்தி அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தினை நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்ய வேண்டும், புளியங்குளம் வடக்கு கிராம சேவகரை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும், மக்கள் கேட்ட கேள்விகளுக்கு பிரதேச செயலாளர் பதில் வழங்காமைக்குரிய காரணம் என்ன? 15 வருடங்களாக முத்துமாரி நகர் “ஏ” புளக் காணிகளுக்கு காணிப்பத்திரம் வழங்காமைக்குரிய காரணம் என்ன? எந்தவிதமான குற்றச்செயல்களும் இல்லாமல் எட்டு இளைஞர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தமைக்கான காரணம் என்ன? – என்ற ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி புளியங்குளம் வடக்கு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் கொட்டகை அமைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போதுகருத்துதெரிவித்தபோராட்டக்காரர்கள் எமது ஐந்து அம்சக் கோரிக்கைகளுக்கு உடனடித் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று கூறினர்.

# நிர்ணய விலையிலும் கூட விலையில் விற்கப்பட்டால் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்!

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அறிவிப்பு

நிர்ணய விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யப்படும் பட்சத்தில், அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கதலைமையில் நேற்று முன்தினம் அமைச்சரவை உபகுழு கூடிய போது, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சம்பா உள்ளிட்ட பல அரிசி வகைகள் இவ்வாறு நிர்ணய விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பா அரிசி 230 ரூபாவிற்கும் நாட்டரிசி 220 ரூபாவிற்கும் கீரி சம்பா 260 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என நிர்ணய விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டறியும் நோக்கில் நேற்று முதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.



# யாழில் காஸ் சிலிண்டர்கள் திருடிய இருவர் மாட்டினர்

யாழ்ப்பாண நகரில் கடந்த சில நாள்களாக நூதனமான முறையில் கடைகள் மற்றும் வீடுகளில் காஸ் சிலிண்டர்கள் திருடிய இருவர் யாழ்ப்பாணக் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பத்துக்கும் மேற்பட்ட காஸ் சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும், போதைப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகவே காஸ் சிலிண்டர் திருடினர் எனவும் ஆரம்ப விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் குருநகர் பகுதியைச் சேந்தவர்கள் எனவும், விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஹேமச்சந்திர தலைமையிலான பொலிஸ் அணியினரால் இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



CENTRAL PARK
JA-ELA

# CENTRAL PARK JA-ELA

## 15 ACRES LARGEST

GATED DEVELOPMENT PROJECT IN SRI LANKA

## OVER 40+ AMENITIES




## COMFORT ASSURED, SPACIOUS LAYOUTS & PREMIUM FACILITIES

KELSEY HOUSE - 3 BHK HOUSES
KELSEY VILLA - 3/4 BHK HOUSES
FAMILY VILLA - PRIVATE APARTMENTS
HARMONY PARK - HOUSING COMPLEX



24/2, Court Road, Weligampitiya, Ja Ela

Blue Ocean™ GROUP OF COMPANIES
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

3500+ UNITS
235+ PROJECTS
20+ CITIES

KELSEY HOMES
40 Years Housing Excellence

## Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

+94 777 546 546 | +94 770 774 774

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka. | www.blueocean.lk | www.kelsey.lk

# யாழிலும் தீப்பந்தப் போராட்டம்






–எஸ்.நிதர்ஷன் –

மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக யாழ்ப்பாணத்திலும் தீப்பந்தப் போராட்டப் பேரணியொன்று நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நேற்று முன்னிரவு இப் போராட்டம் நடைபெற்றது.

யாழ் நல்லூர் பகுதியிலுள்ள அக்கட்சியின் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட தீப்பந்த ஊர்வல பேரணியானது இளங்கதிர் சனசமூக நிலையம் வரை சென்று நிறைவு பெற்றது.

இப் போராட்டத்தில் கட்சியின் அமைப்பாளர்கள், கட்சிப்பிரதிநிதிகள் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் மின்சாரக் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இப் போராட்டத்தின் தொடராக யாழிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்கட்டண உயர்வைக் கண்டித்து வவுனியாவில் தீப்பந்தப் போராட்டம்






மின் கட்டண உயர்வைக் கண்டித்து வவுனியாவில் தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் வவுனியா, இலுப்பையடி முன்பாக குறித்த போராட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "ரணில் – ராஜபக்ஷ அரசே! மின்கட்டணத்தைக் குறை", "மின் கட்டணத்தை கூட்டி வறிய மக்களை கொல்லாதே!", "மின் கண்டண உயர்வால் தற்கொலையைத் தூண்டாதே!", ஜனாதிபதி ரணிலே வீட்டுக்கு போ" என கோசங்களை எழுப்பியச்மையுடன், தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா மாவாட்ட அமைப்பாளரும், எதிர்க்கட்சித் தலைவரின் பிரதான ஒருங்கிணைப்புச் செயலாளருமான ரசிக்கா பிரியதர்சினி மற்றும் கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொணடனர்.

# மேய்ச்சல் தரை விடுவிக்கும் போராட்டம் மன்னாரிலும்!









நானாட்டான்-முசலிகால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் மேய்ச்சல் நிலக் காணியை விடுவிக்கக்கோரி கவனவீர்ப்புப் போராட்டமொன்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் மேச்சல் நிலக் காணியை விடுவிக்குமாறு தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"ஒவ்வொருவருடமும்மாந்தைமேற்கு, இலுப்பை கடவை பகுதிக்கு தமது கால் நடைகளை மேய்தலுக்காக கொண்டு செல்கின்றோம். இதன்போது பல்வேறு சொல்லண்ணா துயரங்களுக்கு முகங் கொடுத்து வருகின்றோம்.

அத்துடன் கால்நடை இழப்புக்களும், மனித இழப்புக்களும் அடிக்கடி இடம்பெறுகின்றன.

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட புல்லறுத்தான் கண்டல் பகுதியை மேச்சல் நிலமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் எனப் பல வருடங்களாகக் கோரிக்கை விடுத்து வந்தோம்.

கடந்த 12 ஆம் திகதி வட மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.

இவ்விடயத்தில் அதிகாரிகள் அலட்சியமாகவே நடந்துக்கொள்கின்றமை வெளிப்படையாகப் புலப்படுகிறது. எமக்கான மேய்ச்சல் நிலங்களை உடனடியாக விடுவித்து தருமாறு கோருகின்றோம்" எனப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், நானாட்டான் – முசலி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், மதத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்களால் மகஜர் ஒன்றும் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று வயல் பிரதேசத்தில்

# கால்வாய்க்குள் இருந்து மீட்கப்பட்ட காட்டு யானை நேற்று உயிரிழந்தது!

(கே.எ.ஹமீட்)

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சங்காணிச்சீமை வயல் பிரதேசத்தில் கடந்த மூன்று நாள்களாக கால்வாய்க்குள் வீழ்ந்து உயிருக்குப் போராடிய காட்டு யானை நேற்று உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

நீர் அருந்துவதற்காக கால்வாய்க்குள் வீழ்ந்த காட்டு யானை வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டது. காயமுற்று நடக்க முடியாமல் இருந்த யானை, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை வேளையில் காட்டு யானை கால்வாய்க்குள் வீழ்ந்ததாகவும், காலில் காயமேற்பட்டு நடக்க முடியாத நிலையில் இக் காட்டு யானை சிலநாள்கள் நடமாடி வந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கியபடி, முரண்பட்டு, மோதிக் களச்சமராடியபடி நிற்கும் பல தரப்புகளுக்கு மத்தியிலும், பேனா என்ற தாக்கத்தை ஏற்படுத்த வல்ல ஆயுதத்துடன் நின்று பிடிப்பது கத்தி மீது நடப்பதற்கு ஒப்பானது.

அந்த அனுபவத்தோடு தப்பிப் பிழைத்த ஒரு சில டசின் ஊடகவியலாளர்களில் நானும் ஒருவன்.

இன்றைய இந்த பீடிகை எழுத்துக்குக் காரணம் இருக்கின்றது.

இன ரீதியில் பிளவுபட்டு, ஒரு தரப்பு இன்னொரு தரப்பை பேயுருவமாக எடைபோட்டு நின்ற இரண்டு இனங்களுக்கு இடையிலான போராகவே அது நடைபெற்று முடிந்தது.

எண்ணிக்கையில் ஆறு, ஏழு மடங்கு பெரிய – 'நாடு' என்ற தனித்துவ வசதி, வாய்ப்பைக் கொண்ட – ஒரு பேரினவாத இனத்துடன், எண்ணிக்கையிலும் வசதிகளிலும் மிகக் குறைந்த ஓர் இனம், 'நாடு' என்று அந்தஸ்து இன்றியே, பிற நாடு எதனின் உதவியுமின்றி, மூன்று தசாப்த காலம் வீரம் செறிந்த வெற்றிகளை நிலைநாட்டிய ஒரு வரலாற்று சகாப்தம் அது.

முரண்பட்ட தரப்புகளின் அந்தக் களத்துக்கு இடையில் மோசமான பல படை அதிகாரிகளையும், தளபதிகளையும், ஏன் தமிழர் தரப்பிலும் அத்தகைய போர் வெறி கொண்ட பலரையும் நான் சந்தித்திருக்கிறேன்.

சிங்களத் தரப்பில் சரத் முனசிங்க, ஜானக பெரேரா, சரத் பொன்சேகா என்று ஈவு இரக்கமற்ற படை அதிகாரிகளை நான் சந்தித்திருக்கிறேன். பழகி இருக்கிறேன். அது போல தமிழ்க் குழுக்களிலும் தயவு தாட்சண்யமே அறியாத இராணுவவாதிகளுடன் நான் ஊடாடியிருக்கிறேன். சிங்கள இராணுவத் தீவிரப் போக்குக் கொண்ட படை அதிகாரிகளில் இருந்தும் நான் சந்தித்த வித்தியாசமான மனிதர் ஜெனரல் லயனல் பலகல்ல.

நேற்று தமது 78 ஆவது வயதில் அவர் காலமானார் என்ற செய்தி வெளியாகி இருந்தது.

1996 முற்பகுதியில் இராணுவம் யாழ்குடா நாட்டை மீளக் கைப்பற்றிய சொற்ப காலத்தின் பின்னர், யாழ்ப்பாணத்தில் இருந்த 51 ஆவது டிவிஷனின் கட்டளைத் தளபதியாக அவர் வந்த போது முதல் தடவை அவரை சந்தித்தேன்.

அப்போது – அதுவரை – ஜானக பெரேரா என்ற இராணுவ வெறி பிடித்த அந்த அதிகாரியின் கீழ் அந்த டிவிஷன் இருந்தது. தினசரி ஓரிரண்டு டசின் தமிழ் இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் படைத் தரப்பால் கைதாகிக் காணாமல் போய்க் கொண்டிருந்த மிக மோசமான காலம் அது. அத்தகைய நூற்றுக்கணக்கான நம் இளைஞர்களின் காலம் செம்மணித் தரவையுடன் முடிந்திருக்கலாமென்று சந்தேகிக்கப்பட்ட சமயம். அப்போது டிவிஷன் தளபதியாக வந்த பலகல்லவிடம் முதற் சந்திப்பிலேயே நம்மவர்கள் கடத்தி அல்லது கைது செய்யப்பட்டு காணாமலாக்கப்படும் பெருந்துயரை நான் ஒரு சவாலாக முன்வைத்தேன். அந்தச் சவாலை கையில் எடுத்து, குறுகிய காலத்தில் அந்தப் பிரச்சினை தொடராமல் முற்றுப்புள்ளி வைத்தவர் பலகல்ல.

பின்னாளில் வடக்குத் தளபதி, இராணுவத் தளபதி, முப்படைகளின் பிரதானி என்ற உயர்வுகளை அடைந்த போதும், அவர் நண்பராகவே பழகியவர். எனக்கும் அவருக்கும் இடையிலான ஊடாட்டம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் நன்கு தெரிந்திருந்தது.

"உங்கள் நண்பர் இராணுவத் தளபதி ஜென்ரல் பலகல்ல ஒரு யுத்த வீரர் அல்லர். அவர் இராணுவப் புலனாய்வில் கைதேர்ந்த நிபுணர் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அவரது அணுகுமுறை மற்றைய இராணுவ அதிகாரிகள் போல அதிகார மிடுக்குடன் கூடிய தூள் பறக்கும் போக்காக இருக்காது, ஆனாலும் எல்லாத் தரப்புகளுக்குள்ளும் ஊடுருவி காரியமாற்றுவதில் அவர் சமர்த்தர் என்பதை மறந்து விடாதீர்கள்!" – என்று தலைவர் பிரபாகரன் எனக்குக் கூறியமை உட்பட பல விடயங்களை எனது புத்தகத்தில் நான் பதிவு செய்திருக்கிறேன்.

புலிகள் – அரசு – இராணுவம் என்ற முத்தரப்புகளுடனும் மிக முக்கிய போரியல் காலகட்டத்தில் நான் குறிப்பிடத்தக்க ஊடாட்டத்தைகொண்டுஇருந்தசமயத்தில், வடக்குத் தளபதியாகவும், இராணுவத் தளபதியாகவும் இருந்தவர் பலகல்ல.

அவருடனான ஊடாட்டங்கள், ஊடகவியலாளனான என்னையும், நான் சார்ந்த நிறுவனத்தையும், புலிகளின் தலைவர்களுடனான எனது நெருக்கத்தையும், அவர் புரிந்து வைத்திருந்த விடயங்களை எல்லாம் 'என் எழுத்தாயுதம்' என்ற நூலில் ஓரளவுக்கு விவரித்து இருக்கிறேன்.

நூல் தம் கைகளுக்குக் கிட்டியவர்கள் அதை வாசிக்கும் போது அந்த மனிதரின் வித்தியாசமான பண்புகள்களைப் புரிந்து கொள்ள முடியும்.

அவரது மறைவுச் செய்தி வந்தமையால் ஒரு மீட்டலாக அவர் பற்றிய எண்ணத்தைத் தொட்டுச் செல்கிறேன். வாய்ப்புக் கிடைக்கும்போது பல சுவையான சம்பவங்களை விவரிப்பேன்.

## ரணிலுக்கு பட்ஜெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவொன்றும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் எனவும், நிவாரணம் கிடைக்காவிடின் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஆதரவு குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு இந்த சந்திப்பில் வலியுறுத்தியுள்ளதாகவும் அறிய முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் அண்மையில்மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பொதுஜன பெரமுனவின் சார்ப்பில் கடுமையான எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டு வரும் பின்புலத்திலேயே இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

## பொலிஸ் நிலையத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காயமடைந்த கான்ஸ்டபிளை அங்கிருந்தவர்கள் உடனடியாக சிலாபம் வைத்தியசாலையில் சேர்த்தனர் என சிலாபம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கைத்துப்பாக்கியை பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புப் பெட்டியில் வைக்கச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் சிலாபம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## அன்று பூனைக்குட்டிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

போல் குரைக்கின்றனர்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

அண்மைய அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கடுமையாக விமர்சித்திருந்தனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நிமல் லான்சா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி விஞ்ஞான ரீதியாக இலாகாக்களை ஒருங்கிணைத்துள்ளார். இது ஒரு பயனுள்ள முடிவு.

நாமலும், சாகரவும் அதை எதிர்த்துப் பேசினால், அவர்கள் தங்கள் தலையில் ஏதேனும் பிரச்சினை இருக்கின்றதா என்று சோதிக்க வேண்டும்.

அரசிலிருந்து வெளியேறும் தைரியம் சாகரவுக்கு உள்ளதா என்று நான் சந்தேகிக்கின்றேன்.

ஏனெனில் அது அவர்கள் அனைவரையும் ஒரு அவநம்பிக்கையான சூழ்நிலையில் தள்ளக்கூடும்.

கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவையை நான்கு தடவைகள் மாற்றியமைத்தபோது நாமல் ராஜபக்ஷ மிகவும் அமைதியாக இருந்தார். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில அமைச்சுக்களை மாற்றியமைத்தபோது பயனற்ற சண்டிப் பேச்சுக்களை அவர் பேசுகின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷவை கேள்வி கேட்க நாமலுக்கு ஏன் தைரியம் வரவில்லை? நாமலும், சாகரவும் அவர்களின் தலையைச் சோதிக்க வேண்டும். கோட்டாபய ராஜபக்ஷவுடன் சேர்ந்து நாட்டை அழித்துவிட்டு அவர்கள் வீரவசனம் பேசுகின்றார்கள்" – என்றார்.

## கொழும்பில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்றிரவு 8.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நீர்கொழும்பைச் சேர்ந்த லோகேஸ்வரன் சயந்தன் என்ற 7 வயது சிறுவன் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற உயிரிழந்த சிறுவனின் தந்தையான இராமச்சந்திரன் லோகேஸ்வரன் (வயது 38) படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காரின் சாரதியான 27 வயதுடைய இளைஞர் சிறு காயங்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளும் காரும் பலத்த சேதமடைந்துள்ளன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சரித்திரம் திரும்புகிறதா?

History repeats itself (வரலாறு மீண்டும் திரும்புகிறது) என்றார் ஜேர்மனியத் தத்துவாசிரியரான ஹேகல். அதையே விரிந்துரைத்தார் கார்ள் மார்க்ஸ்.

இதைப் புரியாமல் நடப்பவர்கள் பெரும்பாலும் அரசியல்வாதிகள்தாம். வரலாறு நமக்குத் தந்த பட்டறிவை பகுத்தாய்ந்து, நமக்கான வழிகாட்டலாக கொள்ளாமல் - பட்டும் தெளியாமல் - மீண்டும் பழைய தவறை இழைத்துக் குட்டிச் சுவராகின்றவர்கள் பெரும்பாலும் அரசியல்வாதிகள்தாம்.

இத்தகைய அறிவு குறைந்த அரசியல்வாதிகள் நம் நாட்டில்தான் தாராளம் போலும்.

வெல்ல முடியாத யுத்தத்தில் வென்று, அதைத் தொடர்ந்து வந்த ஜனாதிபதி தேர்தலில் 18 லட்சம் மேலதிக வாக்குகளால் பெரு வெற்றியீட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மிலேனியத்தின் இரண்டாம் தசாப்த கால ஆரம்பத்தில் அசைக்க முடியாதவராகத்தான் தோற்றமளித்தார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையும், சிறுபான்மை இனத்தவரின் ஐக்கியபட்ட ஆதரவும், அசைக்க முடியாத இரும்புத் துணாக நின்ற மஹிந்த ராஜபக்ஷவைத் தூக்கி எறிந்து பந்தாடச் செய்தன.

எனினும், அப்போது கிட்டிய பெரு வெற்றி எப்படி போட்டடிக்கப்பட்டது என்ற சரித்திரத்தை அதில் நேரடியாக சம்பந்தப்பட்டு அனுபவப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவே மறந்து போனமைதான் வேடிக்கையானது.

சுதந்திர கட்சியில் இருந்து வெளியேறி வந்து, ஒன்றுபட்ட எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக அன்னச் சின்னத்தில் களமிறங்கினார் மைத்திரிபால சிறிசேன. சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவைப் பகிரங்கமாக எதிர்த்து நின்றார்.

கட்சியை விட்டு வெளியே வந்து, கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளருக்கு எதிராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன, அவரது முன்னைய கட்சிக்கு எதிரணியில் நின்ற எதிர்க்கட்சிகளினால் ஜனாதிபதி பதவிக்குக் கொண்டுவரப்பட்டார்.

அந்த ஜனாதிபதி பதவியை பெற்றுக்கொண்டு, மீண்டும் சுதந்திரக் கட்சிக்குள் நுழைந்து, கட்சியின் தலைவராகி, அக்கட்சியை வளர்ப்பதில் மும்முரமானார். அதனால் அவரை ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்த அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட ஐ.தே.கட்சிக்கும், ஏனைய ஆதரவளித்த தரப்புகளுக்கும் எதிராக அரசியல் செய்யத் தொடங்கினார் மைத்திரி.

இந்தச் சந்தர்ப்பவாதம் அன்றைய நல்லாட்சி அரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. அதை பட்டறிவாக பெற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, இப்போது தான் ஜனாதிபதியானதும், முன்னைய நல்லாட்சிக் காலத் தவறையே தானும் செய்ய முயல்கிறார்.

தமது ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்தெடுப்பதற்காக, தம்மை அதிகாரத்திற்குக் கொண்டு வந்த மொட்டுக் கட்சியை மிதிக்கின்றார். முன்னைய நல்லாட்சி அரசுக்கு ஏற்பட்ட கதியைத்தான் - முன்னைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்ட நிலைமையைத்தான் - ரணிலும் வாங்கிக்கட்டப் போகின்றார் போல.

இதைத்தான் சரித்திரம் மீண்டும் திரும்புகிறது அல்லது நிகழ்கிறது எனக் கூறுகின்றார்களோ...?


## ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு 20 கோடி யென் உதவித்தொகை

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜப்பான் 200 கோடி யென் உதவித்தொகை வழங்க தீர்மானித்துள்ளது.

மீன்பிடி மற்றும் நீரியல் வளத் திணைக்களத்திற்கு குளிரூட்டி வசதிகளுடன் கூடிய டிராக்டர்கள், இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு ஐஸ் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டிஜிட்டல் அளவீட்டு இயந்திரங்கள், தேசிய நீர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு வலைகளையும் வழங்க ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஆவணங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## யானை தாக்கி இருவர் மரணம்

இருவேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரியை பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 52 வயதுடைய விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

அதேவேளை, அனுராதபுரம் மாவட்டம், மதவாச்சி பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 48 வயதுடைய வயல் காவலாளி ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மேற்படி இரு சம்பவங்களும் நேற்று இடம்பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இருவரினதும் சடலங்களும் அந்தந்த பிரதேச வைத்தியசாலைகளில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## விபத்தில் பூசகர் சாவு



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி பூநகர், 20 ஏக்கர் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஈச்சிலம்பற்றில் இருந்து சேறுநுவர நோக்கி இவர் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர் மட்டக்களப்பு பூநகர் சிவன் கோயிலில் பூசகராகப் பணி புரியும் - ஈச்சிலம்பற்று, பூநகர் பகுதியில் வசித்த - கே.கஜரூபன் (34வயது) எனத் தெரியவருகிறது.

உயிரிழந்த பூசகரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முடியாவிட்டால் சிவில் நிர்வாகத்தை மாகாணத்திடம் வழங்கிப் பாருங்கள்!

## நடத்திக் காட்டுகிறோம் என்கிறார் சிறிதரன் எம்.பி.



- எஸ்.நிதர்ஷன்-

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் மிக மோசமாக உள்ளதாக சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சிவில் நிர்வாகத்தை மத்திய அரசால் நடத்த முடியாவிட்டால் அதனை மாகாணத்திற்கு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் திருமதி சாள்ஸ் ஆகியோர் தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன் போது யாழ் மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம் பெறுகின்றமை தொடர்பான விடயம் குறித்து ஆராயப்பட்ட போதே சிறிதரன் இவ்வாறு தெரிவித்திருந்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் சிவில் நிர்வாகம் சரியான முறையில் செயற்படுத்தபடாத நிலைமை உள்ளது. இங்கு தொடர்ச்சியாக பல்வேறு சட்ட விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனைத் தடுக்க பொலிஸாரால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படாத நிலைமை உள்ளது. இதனால் நாளாந்தம் பல்வேறு சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆகவே இதனைத் தடுத்து நிறுத்துவதுடன் எதிர்காலத்திலும் நடக்காவாறு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

சட்டவிரோத செயற்பாடுகளை பொலிஸாரினால் கட்டுப்படுத்தி சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முடியாதவிடத்து அந்த அதிகாரத்தை மாகாணத்திற்கு வழங்க வேண்டும்.

அத்தோடு இங்கு எந்தப் பிரச்சினையை எடுத்தாலும் பொலிஸாரால் முடியாது, இராணுவம்தான் வேண்டும் என்று கோர முடியாது. இராணுவத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தவா இவ்வாறு அவர்களை அழைக்க முயல்கின்றீர்கள்? - எனவும் அவர் கேட்டார்.

மேலும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு தேவையற்றது. எனவே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதனை ஒழுங்காகச் செய்ய முடியாவிட்டால் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள். - என்றார் அவர்.

# யாழ் நகர வர்த்தக நிலையத்தில் தீ!







– எஸ்.நிதர்ஷன் –

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் நேற்று முன்னிரவு திடீரென ஏற்பட்ட தீ விபத்தினால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபடுகிறது.

யாழ்.காங்கேசன்துறை வீதியில் ஆலய பொருள்களை விற்பனை செய்யும் வர்த்த நிலையம் ஒன்றிலேயே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இந்த வர்த்தக நிலைய உரிமையாளர் நேற்று வர்த்தக நடவடிக்கைகளை முடித்துவிட்டு வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டு வீட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் திடீரென வர்த்தக நிலையம் தீ பிடித்து எரிவதை அருகிலுள்ள வர்த்தக நிலையத்தவர்களும் வீதியால் சென்றவர்களும் அவதானித்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு தகவல் வழங்கப்பட்டமையுடன் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் அங்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அத்தோடு மின்சார சபையினருக்கும் அறிவிக்கப்பட்டு மின்சார இணைப்பும் துண்டிக்கப்பட்டது.

ஆனாலும் வர்த்தக நிலையத்தில் இருந்த பெருமளவிலான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியமையுடன், வர்த்தக நிலையத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வர்த்தக நிலையத்தில் தீ பற்றியதை அவதானித்து உடனடியாக செயற்பட்டதாலேயே அங்கு தீப் பரம்பல் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டு உள்ளதாக சம்பவ இடத்தில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு வந்த பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மின்னொழுக்குக் காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பில் தீப்பந்தப் போராட்டம்




கொழும்பு, ஒக்.27

மின் கட்டணம் மற்றும் நீர் கட்டணம் உட்பட வாழ்க்கை செலவுகள் அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஒருகொடவத்தை சந்தியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொதுமக்கள் தீப்பந்தம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் சீனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீன நாட்டின் கடற்படை கப்பல்களும் போர்க்கப்பல்களும் போர்ப் பயிற்சிக்காகப் பாகிஸ்தான் நோக்கி நகர்ந்து வரும் நிலையில், இந்தியாவின் பி-81 கண்காணிப்பு விமானங்கள் மற்றும் எம்க்யூ-9பி கண்காணிப்பு டிரோன்களும் கடற்பரப்பில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவுக்குச் சொந்தமான கடற்பரப்புகள் மற்றும் இலங்கை வந்திருக்கும் சீன ஆய்வுக் கப்பலையும் இந்தியக் கடற்படை தொடர்ந்து கண்காணித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் நடைபெறும் கடற்படை பயிற்சியில் பங்கேற்கும் வகையில், சீன கடற்படையின் 3 போர்க் கப்பல்கள் பாகிஸ்தான் எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

ஆனால், பாகிஸ்தான் மற்றும் சீனப் போர்க்கப்பல்கள், பெரிசியன் வளைகுடாப்பகுதிக்கு நெருக்கமாக வந்து, இஸ்ரேல் - ஹமாஸ் போருக்குப் பிறகு, குவிக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் படைகளை நோட்டமிடலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. எனவே, இந்தியக் கடற்படை, கடல்பரப்பில் தீவிர கண்காணிப்புப் பணியை முடுக்கிவிட்டிருக்கிறது.

முன்னதாக சீன ஆய்வுக் கப்பலுக்கு இலங்கைக்குள் அனுமதி அளிக்கப்பட்டமை குறித்த தகவலை அந்நாட்டு வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தினார். கடந்த வாரம் சீனாவுக்கு இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க பயணம் மேற்கொண்டமையைத் தொடர்ந்து, இந்தக் கப்பல் இலங்கைக்கு வந்துள்ளது.

ஆய்வு மற்றும் கண்காணிப்பு கப்பல்களை இலங்கைக்கு சீனா தொடர்ந்து அனுப்பி வருகிறது. இது தொடர்பாக இலங்கையிடம் இந்தியா தனது கவலையைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

இலங்கையின் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகமையுடன் (என்.ஏ.ஆர்.ஏ) இணைந்து கடல்சார்ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட சீன ஆய்வுக்கப்பல் ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு வருகை தர உள்ளதாக அந்நாட்டு அரசு கடந்த ஓகஸ்ட் மாதம் அறிவித்திருந்தது. இதைத்தொடர்ந்து, இந்தக் கப்பலின் இலங்கைப் பயணம் குறித்து அமெரிக்கா கவலையைச் தெரிவித்திருந்தது.

சீன இராணுவத்தின் கடற்படை கப்பலான “ஹை யாங் 24 ஹாவோ“ கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கை வந்தது. இதேபோன்று, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பாலிஸ்டிக் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு சீன கப்பலான “யுவான் வாங் 5” இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வருடாந்த மாநாடு வெள்ளிக்கிழமை (இன்று) இடம்பெறவுள்ளது. கட்சி ஸ்தாபிக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள் சகல தேசிய தேர்தல்களிலும் வெற்றிப் பெற்று ஆட்சியமைத்தோம்.

எமது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் தவறான நிர்வாகத்தினால் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெற்றன. கட்சியும் பலவீனமடைந்தது.கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் கட்சியை பலப்படுத்தி மீண்டும் செயற்பாட்டு ரீதியிலான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.


2024 ஆம் ஆண்டு தேசிய தேர்தல்களில் போட்டியிடத் தயாராகவுள்ளோம். கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்தி அடிமட்ட ரீதியிலான அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளோம். பொதுஜன பெரமுனவின் அடிப்படை கொள்கைகளுக்கு அமைய செயற்படுவோம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். கோட்டபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர் அரசமைப்புக்கு அமைய இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்ய கட்சி மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கட்சியின் தீர்மானத்தை சகல உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டு ஆதரவு வழங்கினார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவை புறக்கணித்து ஐக்கிய தேசியக் கட்சியை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்றமை குறித்து பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள். வழங்கியுள்ள ஒத்துழைப்பை ஜனாதிபதி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க கட்சி மட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை. எமது வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று ஆளும் தரப்பின் ஒரு சிலர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட நிலைப்பாடே தவிர, கட்சியின் நிலைப்பாடல்ல. பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். - என்றார்.

# தமிழகத்தில் ஆளுநருக்கே பாதுகாப்பில்லை: தமிழிசை உள்ளிட்ட தலைவர்கள் கண்டனம்



தமிழக ஆளுநர் மாளிகை நுழைவு வாயில் பகுதியில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்துக்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித் துள்ளனர்.

தமிழக ஆளுநருக்கு எதிராக வார்த்தை வன்முறைகளும், செயல் வன்முறைகளும் அண்மை காலமாக அதிகமாக ஆளுங்கட்சி ஆதரவாளர்க ளால் ஊக்கப்படுத்துவது கவலை அளிக்கிறது என தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித் துள்ளார்.

தமிழிசை சவுந்தரராஜன் மேலும் தெரிவிக்கையில், இது ஜனநாயகத்துக்கு ஏற்புடையது அல்ல. கருத்தை கருத் தால் எதிர்கொள்ள வேண்டுமே தவிர கலவரத்தால் அல்ல. மேலும் ஆளுநரின் மாண்பும், ஆளுநர் மாளிகையின் மாண்பும் காக்கப்பட வேண்டும், தாக்கப் படக்கூடாது என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கோவை குண்டுவெடிப்பு வழக்கில் தொடர்புடையவர்களை விடுதலை செய்யக்கோரி போராட்டம் செய்வதும், அந்த போராட்டக்காரர்களை அரவ ணைப்பதுபோல செயல்படுவதும் கண்டனத்துக்குரியது.

அதனால் தான் சென்னையில் ஆளு நர் மாளிகை முன்பே பெட்ரோல் குண்டு வீசப்பட்டு சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது என்று ஜோர்க்கண்ட் மாநில ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரி வித்துள்ளார்.

இதற்கு தமிழக அரசே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தெரிவிக்கையில்,

குடியரசுத் தலைவர், ஆளுநர் மாளிகைக்கு வரவுள்ள நிலையில், அடிப்படை பாதுகாப்புக்கே குந்தகமான செயல்கள் நடந்திருப்பது, தமிழக உளவுத்துறையும், பொலிஸாரும் தி.மு.க. ஆட்சியில் மொத்தமாக செயல் இழந்து விட்டதையே வெளிக்காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில், தமிழகம் பாதுகாப்பற்ற மாநிலங்கள் பட்டியலில் சேர்ந்து விட்டதோ என்ற அச்சமும் மக்கள் மத்தியில் ஏற் பட்டுள்ளது.

மேலும் குண்டு வீசி பிடிபட்ட நபர் 2 நாட்கள் முன்னர்தான் சிறையில் இருந்து வெளிவந்தவர் என்பது தெரியவந்துள்ளது.

அப்படியானால் ஆளுநர் மாளிகை குண்டுவீச்சுக்கான திட்டம் சிறையிலேயே திட்டமிடப்பட்டதா என்ற சந்தேகமும், இதற்கு பின் மிகப்பெரிய சதிவலை பின்னப்பட்டிருப்பதும் உறுதியாகிறது என்று தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்தே சட்டம் ஒழுங்கை சீர்குலைப் போரின் ஆதிக்கம் கொடி கட்டி பறக்க ஆரம்பித்து விட்டது என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித் துள்ளார்.

ஆளுநர் மாளிகைமீதே பெட் ரோல் குண்டு வீசும் துணிச்சல் சட்டவிரோ திகளுக்கு வந்திருக்கிறது என்றால், வன்முறையாளர்கள் மீது தி.மு.க. அரசு மெத்தன போக்கை கடைப்பிடிப்பதுதான் காரணம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்..

இதேவேளை, முக்கியத்துவமில்லாத விஷயங்கள் மீது மக்களின் கவனத்தை திசை திருப்புவதில் தி.மு.க. அரசு மும் முரமாக இருக்கின்றது என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரி வித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

குற்றவாளிகள் வீதிகளில் இறங்கி யுள்ளனர். தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்படுவதால், தி.மு.க. அரசே தாக்கு தல்களுக்கு காரணமாக இருக்குமோ என்ற எண்ணத்தை உருவாக்குகிறது.

ஆனால். நமது முதல்வரோ தற்போது செய்து வருவதைப் போலவே இந்தச் சம்பவத்தில் இருந்தும் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கான ஏற் பாட்டை செய்து கொண்டிருப்பார் என்று தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி முறிவு நம்ப முடியாத நாடகம்: உதயநிதி கருத்து

பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு என்று அ.தி.மு.க. கூறுவது நம்ப முடியாத நாடகம் என்று அமைச்சர் உதயநிதி தெரிவித்துள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதய நிதி நேற்று தேனி மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

தி.மு.க. இளைஞரணியின் 2 ஆவது மாநில மாநாடு டிசம்பர் 17 ஆம் திகதி சேலத்தில் நடைபெற உள்ளது. ஒரு மாநாடு எப்படி நடக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இது அமையும். ஆனால் மதுரையில் சில மாதங் களுக்கு முன்பு ஒரு மாநாடு நடை பெற்றது. ஒரு மாநாடு எப்படி நடத்தக் கூடாது என்பதற்கு உதாரணமாக அது அமைந்து விட்டது. முன்னாள் முதல்வர் கருணாநிதி இருக்கும் வரை நீட் தேர்வு வரவில்லை.

பா.ஜ.க. பின்னணியில் செயல்பட்ட அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த போதுதான் நீட் தேர்வு வந்தது. இதுவரை 22 பேர் நீட்தேர்வு காரணமாக உயிரிழந்துள் ளனர்.

நீட் தேர்வை ரத்து செய்ய இரண்டு முறை மசோதா நிறைவேற்றப் பட்டுள் ளது. தற்போது நீட் விலக்கை மக்கள் இயக்கமாக மாற்ற 50 லட்சம் பேரிடம் கையெழுத்து வாங்க இருக்கிறோம். அதை சேலம் மாநாட்டில் முதல்வரிடம் ஒப்படைப்போம். ஒவ்வொரு வங்கிக் கணக்கிலும் தலா 5 லட்சம் ரூபா செலுத்துவோம் என்று கூறிய பா.ஜ.க., அதைச் செயல்படுத்தவில்லை.

ஆனால் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். குடும்ப ஆட்சி என்று எங்களைக் குறை கூறுகிறார்கள்.

தமிழகமே எங்கள் குடும்பம்தான். அந்த அடிப்படையில்தான் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. பா.ஜ.க. உடனான கூட்டணி முறிவு என்று அதிமுக கூறுவது நம்ப முடியாத வெறும் நாடகம் என்று தெரிவித்துள்ளார்.

# காசாவுக்குள் ஊடுருவிய இராணுவ பீரங்கிகள்: தரைவழித் தாக்குதலுக்கு தயாராகும் இஸ்ரேல்!



ஹமாஸ் மீது தாக்குதல் நடத்தும் வகையில் இஸ்ரேலிய இராணுவத்தின் தரைப்படைகள் காசா பகுதிக்குள் பெரிய அளவில் ஊடுருவியது என இஸ்ரேலின் இராணுவ வானொலி அறிவிப்பை மேற்கோள்காட்டி ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்திடும் விதமாக இஸ்ரேல் இராணுவத்தின் பீரங்கிகள் காசா பகுதிகளுக்குள் நுழைந்த வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

தரைவழித் தாக்குதல் நடத்தும் நோக்கத்தோடு சில வாரங்களுக்கு முன்பு நடத்தப்பட்ட சோதனையைவிட நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனை பெரியது என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலின் இராணுவத்தின் வானொலியும் தரைவழி ஊடுருவலை உறுதிப்படுத்தியுள்ளது. போரை நிறுத்த சர்வதேசத் தலைவர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி வருகிறது.

பிரதமர் நெதன்யாகு தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி வருகிறது என அறிவித்த சிலமணி நேரங்களில் இஸ்ரேலின் இராணுவத்தின் பீரங்கிப் படை வடக்கு காசாவுக்குள் நுழைந்துள்ளன.

எனினும், சில மணிநேரங்களில் பீரங்கிகள் அனைத்தும் காசாவில் இருந்து பின்வாங்கியுள்ளன. இஸ்ரேல் பாதுகாப்புப் படை இந்த நடவடிக்கையை, 'தரைவழித் தாக்குதலுக்கான ஒத்திகை' எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும், 'அடுத்த கட்ட போருக்கான ஆயத்தம்' என்றும், சில மணிநேரங்களில் இராணுவ வீரர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறி இஸ்ரேலிய பகுதிக்கு திரும்பிவிட்டனர் என்றும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

முன்னதாக, இஸ்ரேல் மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காசா மீதான தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் இராணுவம் தயாராகி வருகிறது. எப்போது, எப்படி என்பதை நான் விரிவாகக் கூறமாட்டேன். ஆனால், ஹமாஸின் இலக்குகளை அழிக்க, காசா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம்.

எங்களது இறையாண்மையை காக்கவும், எங்களின் இருப்புக்காகவும் போரில் ஈடுபட்டுள்ளோம். இந்தப் போரில் இரண்டு அடிப்படை நோக்கங்களை அமைத்துக் கொண்டுள்ளோம். அவை, ஹமாஸின் ராணுவ மற்றும் அரசாங்க திறனை ஒழிப்பது.

பிடிபட்டுள்ள பணயக் கைதிகளை மீண்டும் அழைத்துவருவது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற தேவையான அனைத்தையும் இஸ்ரேல் செய்யும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காசாவுக்கு உடனடி உதவிகள் தேவை என உலக சுகாதார நிறுவனம் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளது.

மருந்துகள், சுகாதார பொருட் கள் இல்லாமல், காசாவின் மருத்துவமனைகள் கற்பனை செய்ய முடியாத மனிதாபிமான பேரழிவின் விளிம்பில் உள்ளன.

காசாவுக்கு உடனடியாக மருத்துவ உதவிகள் தேவை. உதவிகள் கிடைத்தால் மட்டுமே, காசா மீண்டெழ முடியும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவசரமாக தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை காசாவுக்குள் கொண்டு வருவதற்கு இஸ்ரேல் முழு போர்நிறுத்தத்திற்கு உடன்பட வேண்டும் என பாலஸ்தீன வெளியுறவு அமைச்சர் ரியாத் அல்-மலிகி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், இம்முறை இஸ்ரேல் நடத்தும் போர் வித்தியாசமானது. இந்த முறை இது பழிவாங்கும் போர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'மனிதகுலத்திற்கு அவமானம்': துருக்கி ஜனாதிபதி விசனம்



காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் படுகொலையின் அளவை எட்டியுள்ளன என துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சர்வதேச சமூகத்தின் மௌனம் காப்பது மனிதகுலத்திற்கு அவமானம் என்றும் துருக்கிய ஜனாதிபதி கூறியுள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடர்பாக பாப்பரசர் போப் பிரான்சிஸ்சுடன் தொலைபேசியில் கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அத்துடன்இ சுதந்திர பாலஸ்தீன அரசை அமைப்பதன் மூலமாக மாத்திரமே மோதலுக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என்ற துருக்கியின் நிலைப்பாட்டை எர்டோகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# யுவதியை அடித்துக் கொலை செய்து புதைத்த கணவனை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

## முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் விடுத்தது





முல்லைத்தீவு நீராவிப்பிட்டி கிழக்குக் கிராமத்தில் இளம்பெண் ஒருவரைக் கொலை செய்து புதைத்த குற்றசாட்டின் பெயரில் கைது செய்யப்பட்ட கணவனை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீராவிப்பிட்டி கிழக்கு பகுதியில் வாடகை வீட்டில் தங்கியிருந்த இளம் குடும்பப் பெண்ணான ஞானசீலன் கீதாஞ்சலியை (வயது 23) கொலை செய்தவர் எனச் சந்தேகிக்கப்படும் கணவனான 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட இளம் பெண் மலசலகூட குழிக்கு அருகில் புதைக்கப்பட்ட நிலையில் உடலம் கடந்த செவ்வாயன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

மேற்படி இளம் குடும்பப் பெண் தினசரி தொலைபேசியில் தனது தாயாருடன் நாளாந்தம் உரையாடுபவர் எனக் கூறப்படுகிறது.

கடந்த 21 ஆம் திகதிக்குப் பின்னர் மகளின் தொலைபேசி துண்டிக்கப்பட்ட நிலையில் 23ஆம் திகதி மகளும் மருமகனும் வசிக்கும் வீட்டிற்குத் தாயார் சென்று பார்த்தபோது வீட்டில் யாரும் இருக்கவில்லை. அவர்கள் தங்கி இருந்த வீட்டின் பின்புறம் புதிதாக மண்ணால் நிரப்பட்ட குழி ஒன்று காணப்படுவதாகவும் இதனால் தாம் சந்தேகம் அடைந்துள்ளார் எனவும், பெண்ணின் தாயாரால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய அந்த இளம் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

இந்தக் கொலையைச் செய்தவர் எனக் கருதப்படும் இளங்கணவர் கெ-ாழும்பு பகுதியில் வைத்து கடந்த 24 ஆம் திகதி முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து புதைக்கப்பட்ட குடும்பப் பெண்ணின் உடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதில் பெண்ணின் கழுத்தில் பலமாக அடிவிழுந்த காரணத்தினால் பெண் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குடும்பத்தில் பிரச்சினை அவ்வப்போது இடம்பெற்று வந்துள்ள நிலையில், இருவரும் மாறி மாறித் தாக்கியுள்ளார்கள், இதன்போது கணவன் மனைவியின் கழுத்தில் தாக்கியதில் மனைவி நிலத்தில் விழுந்துள்ளார், தொடர்ந்து மனைவி உயிரிழந்துள்ளார் எனத் தெரிய வந்திருக்கிறது. அதன் பின்னர் உடலத்தை யாருக்கும் தெரியாமல் மலசலகூடத்-திற்கு அருகில் உள்ள குழியில் போட்டு தாம் மூடிவிட்டுள்ளார் எனச் சந்தேக நபர் விசாரணைகளில் தெரிவித்திருக்கின்றார்.

உயிரிழந்த பெண்ணின் உடலம் அவரது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட கணவனை நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது அவரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.












# தேசிய அடையாள அட்டைக்கான விநியோகக் கட்டணம் அதிகரிப்பு

தேசிய அடையாள அட்டைக்கான விநியோகக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆள்பதிவுச் சட்டத்தைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியூடாகக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாதம் 23 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தத்திற்கு அமைவாக தேசிய அடையாள அட்டையின் பிரதியை பெற்றுக்கொள்வதற்கான புதிய கட்டணம் 1000 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான கட்டணமும் அதிரிக்கப்பட்டுள்ளது.

இணையத்தளம் ஊடாக முன்வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கான கட்டணம் 25 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேரடியாக முன்வைக்கப்படும் விண்ணப்பங்களுக்கான கட்டணம் 500 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைகளுக்கான புகைப்படக்கலைஞராக பதிவு செய்வதற்கு இதுவரை அறவிடப்பட்ட 10,000 ரூபா கட்டணம் 15,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பதிவுகளை புதுப்பிப்பதற்கான 2000 ரூபா கட்டணம் 3000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்



புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நாடளாவிய ரீதியில் 434 நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனப் பரீட்சைகள் பிரதி ஆணையாளர் நாயகம் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தவணைப் பரீட்சைகள் நடைபெறுவதனால் மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது.

## சங்கிலியை அறுத்தவர்கள் தப்பிக்க மோ.சைக்கிளைக் கைவிட்டு ஓட்டம்



சங்கிலி அறுத்துக் கொண்டு தப்பிக்க முயன்ற கொள்ளையர்களைத் துணிச்சலாகத் தாயார் ஒருவர் துரத்திச் சென்ற போது அவர்கள் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இச் சம்பவம் கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாகமம், கொயிலாமனைச் சந்தியில் நேற்றுக் காலை 11:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

முன்பள்ளியில் இருந்து மகளை ஏற்றிக் கொண்டு கொயிலாமனை, அண்ணமார் கோவிலடியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளம் தாயை வழிமறித்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நபர் ஒருவரின் பெயரைச் சொல்லி வினாவியுள்ளனர்.

அவரை எனக்குத் தெரியாது என்று இளம் தாய் கூற, அவர்கள் அந்த இளம் தாயை மோட்டார் சைக்கிளுடன் தள்ளிக் கீழே வீழ்த்தியுள்ளனர்.

வீழ்ந்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த முக்கால் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளுடன் அவர்கள் தப்பித்துள்ளனர். இளம் தாய துணிச்சலாக கொள்ளையர்களைத் துரத்தியுள்ளார்.

A9 வீதியால் பயணித்தவர்களும் இதனை அவதானித்து, உடனேயே கொள்ளையர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்ட போது, அவர்கள் தாம் வந்த மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு விட்டுத் தப்பித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல் களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் நால்வர் சேவையிலிருந்து இடைநிறுத்தம்!



நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளில் இருந்த நெல் தொகை திருடப்பட்டமை தொடர்பில் நான்கு களஞ்சியசாலை காப்பாளர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

நிக்கவெரட்டிய, மஹவ மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேசங்களில் உள்ள நெல் களஞ்சியசாலைகளின் காப்பாளர்கள் நால்வரே சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்துள்ளார்.

நெல் களஞ்சியசாலைகளில் இருந்து 70 கோடி ரூபா பெறுமதியான நெல் கையிருப்பு காணாமல் போயுள்ளது என நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மொத்தக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபையினால் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்கு, தென்கிழக்கு மற்றும் மேற்காசியாவுடன் இலங்கையின் வர்த்தக உறவுகள் விரிவாக்கம்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல்

தெற்கு, தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசியாவுடனான இலங்கையின் வர்த்தக தொடர்புகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை அனுமதியுடன் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சர்வதேச வர்த்தக அலுவல்கள் பணியகத்தினால் வெளிநாடுகளுடனான வர்த்தக பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பிலும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய வர்த்தக பேச்சுவார்த்தைக் குழுவின் வழிநடத்தலுடன் நிதி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகளுக்கான திணைக்களம், வணிக திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் முதலீட்டுச் சபை உள்ளிட்ட நிறுவன சிரேஷ்ட அதிகாரிகள் இந்தத் தேசிய வர்த்தகப் பேச்சுக்கான குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

உரிய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளுடன் கூடிய 11 உப குழுக்கள், வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் ஊடாக, பங்குதாரர்களுடன் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு, தேசிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவுக்கு



ஒத்துழைப்பு வழங்குகின்றன.

2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான திட்டத்தின் ஆரம்பமாக இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தை பலப்படுத்தும்போது விநியோக கொள்ளளவை பலப்படுத்துதல், சந்தை பிரவேசம் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சம்பிரதாயபூர்வமான மிகப்பெரிய இறக்குமதியாளர்களாக அமெரிக்கா, ஐக்கிய அரபு இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடனான தொடர்புகளைப் பலப்படுத்திக் கொள்ளும் அதேவேளை தெற்கு, தென்கிழக்கு, மேற்கு ஆசியாவுடனான ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் பொருள்கள் வியாபாரம் தொடர்பில் கவனம் செலுத்தி, இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஆகியவற்றை கைச்சாத்திடவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில்கைசாத்திடப்படவுள்ளஉத்தேசபொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தம் தொடர்பிலான 12 ஆவது சுற்றுப் பேச்சு அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது காணப்படும் இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு மேலதிகமான விடயங்களை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# காங்கேசன்துறை மாங்கொல்லையில் ஞான வைரவர் ஆலய பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை மேற்கு, மாங்கொல்லை ஞான வைரவர் ஆலய பாலஸ்தாபனம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

நேற்றுக் காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூஜைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையிலான சுப வேளையில் பாலஸ்தாபனம் இடம்பெற்றது.

இந்த ஆலயம் கடந்த 33 வருட காலமாக இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்தது. கடந்த ஜூன் மாதக் கால பகுதியில் ஆலய சூழல் மற்றும் அதனை அண்டிய சில பிரதேசங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி சென்ற நிலையில, ஆலய புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்கும் முகமாக பாலஸ்தாபன கும்பாபிசேஷகம் இடம்பெற்றது.













# மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட எட்டுப் பேர் மஸ்கெலியாவில் கைது

(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மவுசாகல நீர் தேக்கத்தின் நீர் செல்லும் ஆற்றில் சட்ட விரோதமான முறையில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்ட எட்டு பேர் நேற்று மதியம் கைது செய்யப்பட்டு நேற்றே ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

நோட்டன் பகுதியில் உள்ள திபட்டன் தோட்டத்தை சேர்ந்த மூன்று பேரும் இரத்தினபுரிப் பகுதியைச் சேர்ந்த ஐந்து பேருமே இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அனைவரும் நேற்று மதியம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சீட்டன் தோட்டத்தை அண்டிய பகுதியில் உள்ள மவுசாகல ஓயாவில் சட்ட விரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்த போது மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்குக் கிடைத்த இரகசிய தகவல்களை தொடர்ந்து அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர்.

இரத்தினக்கற்கள் அகழ்விற்காக அவர்கள் உபயோகித்த ஆயுதங்களையும் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.



# நகர அபிவிருத்தி அதிகார சபையின் யாழ் திட்டங்களை ஆராய்வதற்கு குழு

## அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில்



யாழ் மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை உள்ளிட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களில் காணிகள் தேவை என நகர அபிவிருத்திப் பணிப்பாளரால் கோரிக்கை விடப்பட்டது.

இதற்கு, குறித்த திட்டங்கள் என்ன, இவை யாரால் மேற்கொள்ளப்படவுள்ளன என்பவை தொடர்பில் முறையான விவரங்கள் தேவை என்ற சாரப்பட நாடாளுமன்ற உறுப்பினர்களால் கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையில், ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரினால் சம்பந்தப்பட்ட எட்டுத் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தருவதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழுவின் தலைவராக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் நியமிக்கப்பட்டார். அவருடன் இணைந்துஜனாதிபதியின்வடக்குக்கான இணைப்பாளர் இளங்கோவன் மற்றும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலர்கள் அடங்கியவர்கள் குழுவாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



# போக்குவரத்து விதி மீறல்களுக்காக யாழில் நாளாந்தம் மாட்டும் 200 பேர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளாந்தம் 200 பேர் போக்குவரத்து விதிகளை மீறியமைக்காகப் போக்குவரத்துப் பொலிஸாரிடம் சிக்குகின்றனர் என யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பொலிஸ்ப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருநூறு பேருக்கு போக்குவரத்துப் பொலிஸார் தண்டப் பற்றுச்சீட்டு வழங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைக்கவசம் அணியாது செல்வோர், மதுபோதையில் வாகனம் செலுத்துவோர், வீதி நடைமுறைகளைப் பின்பற்றாமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாது பயணித்தமை மற்றும் வாகன வரி மற்றும் ஏனைய வாகன சான்றிதழ்களை வைத்திருக்காமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக நாளாந்தம் 200 பேருக்கு தண்டப் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தண்ட பற்றுச்சீட்டு வழங்கப்படுபவர்களில் 10 வீதமானவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.10.2023




இன்று உங்கள் பொறுமையை சோதிக்கும் கடினமான சூழ்நிலை காணப்படும். அதனால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். நீங்கள் சாதகமான பலன்களைக் காண பொறுமை மற்றும் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று அதிகப் படியான பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை ஒழுங்குபடுத்தி அதன்படி திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். கவனமற்ற வார்த்தைகளால் உறவு பாதிக்கும். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வழிப் பிரச்சினைக்கு ஆளாகலாம்.




இன்று நன்மையான பலன்கள் கிடைக்கும். வாழ்வின் நன்மை தீமை உணர்வதற்கான அனுபவ அறிவை உணரும் நாள். நற்பலனகள் காண சுமூகமான உறவை பராமரிப்பது நல்லது.

பணியிடத்தில் சவால்கள் நிறைந்திருக்கும். என்றாலும் நீங்கள் இதனை சமாளித்து நற்பெயர் பெறுவீர்கள். வளர்ச்சி காண நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையை புரிந்து கொள்வதன் மூலம் இனிமையான வார்த்தைகளை பேச இயலும். நீங்கள் உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் ஆரோக்கியமாக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்களிடம் இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்திருக்கும். அதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்று அனைத்து விதத்திலும் வெற்றி கிடைக்கும் நாள்.

இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகமாக இருப்பீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு ஒன்றாகச் சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். சீரான பணப்புழக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் முழு முயற்சி எடுக்க வேண்டும். விரைவாக செயலாற்றுவதை தவிர்ப்பதன் மூலம் பாதகமான சூழ்நிலையை தவிர்க்கலாம்.ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் கையாள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். ஆரோக்கியமான உறவை பாரமாரிக்க இத்தகைய பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதியில் ஏற்ற இறக்கங்கள் உங்களுக்கு கவலை அளிக்கும். குறைவான பணப்புழக்கம் காரணமாக நீங்கள் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று விருப்பமான பலன்களை அடைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். இன்று உங்கள் செயல்களில் திருப்தி காண்பீர்கள். மந்திர ஜெபம் மற்றும் பிரார்த்தனை மூலம் நீங்கள் மன ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் நீங்கள் சிறந்த பலனைக் காண முறையாக திட்டமிட வேண்டும். அனுசரித்துப் போவதன் மூலம் பலன் பெறலாம்.

இனம் தெரியாத காரணத்தினால் உங்கள் துணையிடம் எரிச்சலடைய வாய்ப்பு உள்ளது. இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். உறவில் மகிழ்ச்சி நிலவ உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

உங்கள் செலவுப் பழக்கத்தில் கவனம் தேவை. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். இன்று செலவுகள் அதிகரித்து காணப்படும்.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பது இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் பணியில் மிகுந்த திருப்தியை உணர்வீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நல்லாதரவு பெறும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணயுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். நீங்கள் பரஸ்பரம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் அன்பு வளரும்.

அதிக பண வரவு உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மனஉறுதி காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை பெற்றுத் தரும்.

உங்கள் பணியின் மூலம் நீங்கள் பல நற்பலன்களைக் காணலாம் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

உங்களின் சகஜமான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். அமைதியான சூழ்நிலை காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் உங்கள் உணர்வுகளையும் உணர்சிகளையும் கட்டுபடுத்த வேண்டும். இன்று நன்மையான பலன்கள் காண நீங்கள் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

சில கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளும் போது கடுமையாக நடந்து கொள்வீர்கள். எனவே சகஜமாக நடந்து கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. நீங்கள் தேவையற்ற செலவுகளை செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.10.2023

## தனுசு

இன்று வளர்ச்சி நோக்கி செயலாற்ற உகந்த நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய நீங்கள் உங்கள் புத்தி சாலித்தனம் மற்றும் திறமையை பயன்படுத்துவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடித்து விடுவீர்கள்.

உங்களின் இனிமையான வார்த்தை களால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள் மற்றும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் கிடைக்கும் அது உங்களுக்கு தக்க நேரத்தில் உதவிகரமாக இருக்கும்.

## கும்பம்

இன்று முடிவுகள் எடுக்கும் போது அமைதியும் கட்டுப்பாடும் தேவை. எந்த செயலையும் செய்வதற்கு முன் நன்றாக யோசிக்க வேண்டும். அனுசரனையான அணுகுமுறை நன்மை அளிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. அதிகப் பணிகள் சுமையாக இருக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. அகந்தைப் போக்கு உறவில் மகிழ்ச்சியை ஏற்படுத்தாது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். சிக்கனம் கடைபிடிக்க வேண்டும். உங்கள் செலவுகளில் கட்டுப்பாடு தேவை.

சிறப்பான ஆரோக்கியத்திற்கு முறையான உணவு முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

## மகரம்

இன்று மிகவும் துடிப்பான நாளாக அமையும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களின் உறுதியான போக்கு மற்றும் மன உறுதி மூலம் வெற்றி காண்பீர்கள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்த இயலும்.

இன்று சௌகரியங்கள் அதிகம் காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மீனம்

சில குடும்ப பிரச்சினை காரணமாக கவலையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் சிறப்பாக செயலாற்றலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் ஆக்கப்பூர்வமான பலன்கள் கிடைக்காது. இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணை உங்களிடம் வேறுபட்டு நடப்பதாக நீங்கள் உணர்வீர்கள். என்றாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் துணை உங்களிடம் முழு அன்போடு இருப்பார்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இன்றைய அடிப்படை தேவைகளைக் கூட உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park



# இலங்கையிடம் மண்டியிட்டது நடப்பு சம்பியன்

நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை 34 ஓவர்களுக்குள் சுருட்டிய இலங்கை, 26 ஓவர்களுக்குள் வெற்றியிலக்கைக் கடந்து அபார வெற்றி பெற்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் பெங்களூரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியன் இங்கிலாந்து - முன்னாள் சாம்பியன் இலங்கை அணிகள் மோதின.

இலங்கை அணிக்காக மூத்த - அனுபவ வீரர் அஞ்சலோ மத்யூஸ் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாடியது. அதன்படி, அந்த அணியின் தொடக்க வீரர்களாக ஜானி பேட்ஸ்டோவும், டேவிட் மலனும் களமிறங்கினர்.

இந்த ஜோடி, அணிக்கு ஓரளவு சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தது. டேவிட் மலன் 26 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். பேர்ஸ்டோ 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த ஜோ ரூட், 3 ஓட்டங்களுடன் 'ரன்-அவுட்'டாகி ஏமாற்றமளித்தார்.

அபாரமான இலங்கையின் பந்துவீச்சில் இங்கிலாந்து தடுமாடியது. இதனால் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

ஒருபுறம் பென் ஸ்டோக்ஸ் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், மறுபுறம் விக்கெட்டுகள் விழுந்து கொண்டே இருந்தன. அணித்தலைவர் ஜோஸ் பட்லர் 8 ஓட்டங்களுடன், லிவிங்ஸ்டன் ஓர் ஓட்டத்துடனும் மொயீன் அலி 15 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

சிறிதுநேரம் போராடிய ஸ்டோக்ஸ், 43 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி, 33.2 ஓவர்களில் 156 ஓட்டங்களைச் சேர்த்து சுருட்டிக்கொண்டது.

இலங்கை சார்பாக பந்துவீச்சில், லகிரு குமார 3 விக்கெட்டுகளையும், ராஜித மற்றும் அனுபவ வீரர் மத்யூஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் 157 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. அணியின் தொடக்க வீரர்களாக பதும் நிஷங்கவும், குசல் பெரேராவும் களமிறங்கினர்.

குசல் பெரேரா 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் குசல் மெண்டிஸ் 11 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும், பதும் நிஷங்க - சமரவிக்ரம ஜோடி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைச் சேர்த்தது. சிறப்பாக விளையாடிய இருவரும் அரைச்சதம் அடித்தனர்.

இறுதியில் இலங்கை அணி 25.4 ஓவர்களில் இலக்கைக் கடந்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபாரவெற்றி பெற்றது.

இலங்கையின் துடுப்பாட்டத்தில் நிஷங்க, 77 ஓட்டங்களுடனும், சமரவிக்ரம 65 ஓட்டங்களுடனும் கடைசிவரை களத்தில் நின்றனர்.

இங்கிலாந்து சார்பாக பந்துவீச்சில் டேவிட் வில்லி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக இலங்கையின் லகிரு குமார தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இலங்கை அணி 4 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நடப்பு சம்பியனான இங்கிலாந்து அணி, அடுத்தடுத்த தோல்விகளால், வெறும் 2 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் 9ஆவது இடத்தில் உள்ளது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன.

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை**

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 5 | 5 | 0 | 0 | 0 | 10 | 1.353 |
| 02 | தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 2.370 |
| 03 | நியூஸிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | 1.481 |
| 04 | அவுஸ்திரேலியா | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | 1.142 |
| 05 | இலங்கை | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.205 |
| 06 | பாகிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.400 |
| 07 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.969 |
| 08 | பங்களாதேஷ் | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.253 |
| 09 | இங்கிலாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.634 |
| 10 | நெதர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -1.922 |

குறிப்பு: போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி